**கனம் சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திருமதி. R. கீதா, B.A.,B.L.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை.**
**2024ம் வருடம் பிப்ரவரி மாதம் 8ம் நாள் வியாழக்கிழமை,**
**இடைக்கால மனு எண்.3/2023**
**இன்**
**மேல்முறையீட்டு வழக்கு எண்: 26/2021**

ராமச்சந்திரன் ..மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

..எதிர்..

K. மாரி என்ற மாரிமுத்து ..எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 02.02.2024ம் தேதி என் முன்னர் வந்தபோது மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு. P. ஆதி மூலம் பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரைஞர் திரு. T. முத்துராமலிங்கம், எம்.ஏ.., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று 08.02.2024 இந்நீதிமன்றம் வழங்கலான:-

**உத்திரவு**

இம்மனுவானது, மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் கீழ், சமூகம் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து அவரை தாவாச்சொத்தின் உண்மைநிலை, இயற்கை அமைப்பு, புல எண், நான்குமால்கள் மற்றும் விஸ்தீரணம் ஆகியவற்றை வருவாய்த்துறை ஆவணங்களின் அடிபப்டையில் நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து பூமியில் நிர்ணம் செய்து அது குறித்து விரிவான அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்திரவிட வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/மேல்முறையீட்டளார் தரப்பிலான மனு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதாரர் தனது மனுவில், தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும்

கீழமை நீதிமன்றத்தில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா 6ல் தாவா சொத்தானபுல எண் 194/2ஐ பொறுத்து பிரதிவாதி எந்தவிதமான தாவாவும் ஏற்படவில்லை என்றும் அதனை பொறுத்து தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றும் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றும் புல எண் 194/4ல் தான் தன்னுடைய கட்டிடம் உள்ளதாகவும் தாவா சொத்தான புல எண் 194/2ஐ பொறத்து தீர்ப்பு அளிப்பதற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்று கூறியுள்ளதாகவும் இதனையே கீழமை நீதிமன்ற தீர்ப்புரை பாரா 10ல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேலும் கீழமை நீதிமன்ற தீர்ப்புரை பாரா 11ல் தாவா சொதின் புல எண்ணை பூமியில் களஆய்வு செய்து நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருடன் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அறிக்கை அளிக்கப்படும் பட்சத்தில் பூமியில் தாவா சொத்தானது எந்த புல எண்ணை கட்டுப்படுத்துகிறது என்று தெளிவாக தெரியவரும் என்றும் பிராது சொத்து விபரத்தில் தாவா சொத்து விபரத்தை தெளிவாகவும், முழுமையாகவும் சொல்லாத காரணத்தினால் மேற்படி நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்று நிரூபணம் செய்யும் கடமை வாதியைச் சாரும் என்றும் ஆனால் இவ்வழக்கில் வாதி தரப்பில் அவ்வாறு எவ்வித மனுவும் தாக்கல் செய்து அறிக்கை பெறப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீடுதாரரும் கீழமை நீதிமன்றத்தில் தாவா சொத்தான புல எண் 194/2 ஐ பொறுத்து தீர்ப்பு அளிப்பதற்கு தனக்கு ஆட்சேபனை இல்லை என்று எதிர்வழக்குரையிலேயே ஒப்புக்கொண்டுவிட்டதால் மனுதாரர் தரப்பில் எவ்விதமான நீதிமன்ற ஆணையர் நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விட்டேன் என்றும் ஆனால் கீழமை நீதிமன்றம் அதனையே முக்கியமான தவறாக குறிப்பிட்டுள்ளதால் தாவா சொத்தின் உண்மைநிலை, இயற்கை அமைப்பு புல எண், நான்குமால்கள் மற்றும் விஸ்தீரணம் ஆகியவற்றை தற்பொழுது சமூகம் நீதிமன்றத்திற்கு தெளிவாக்கிடவும் உபயதரப்பினர்களிடையே மேற்கொண்டு எவ்விதமான வியாஜ்ஜியங்களும் ஏற்படுவதனை தடுத்திடவும் நீதியின்பாலும் தாவா சொத்தை பார்வையிட்டு அளந்து பூமியில் நிர்ணயம் செய்து அதுகுறித்து அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்திட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்திட வேண்டியது அவசியம் என்றும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யும்பட்சத்தில் உபயதரப்பினர்களிடையே உள்ள பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என்றும்

நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்படுவதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படக்கூடியதில்லை என்றும் ஆகையால் சமூகம் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து அவரை தாவாச்சொத்தின் உண்மைநிலை, இயற்கை அமைப்பு, புல எண், நான்குமால்கள் மற்றும் விஸ்தீரணம் ஆகியவற்றை வருவாய்த்துறை ஆவணங்களின் அடிபப்டையில் நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து பூமியில் நிர்ணம் செய்து அது குறித்து விரிவான அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்திரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதார்/எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பிலான எதிருரையின் சுருக்கம்:**

எதிர்மனுதார் தனது எதிர்உரையில், எதிர்மனுதாரரால் கீழமை நீதிமன்றத்தில் 10.12.2015ம் தேதியன்று தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மனுதாரர் தனது அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ளது போல புல எண் 194/2யை பொறுத்து எவ்விதமான தாவாவும் ஏற்படவில்லை என்றும் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றும் எந்த இடத்திலும் கூறவில்லை என்றும் எதிர்மனுதாரரால் வாதியின் தந்தை போதகுருசாமியால் பிரதிவாதியின் தந்தை கருப்பையாகோனாருக்கு வீடு கட்டி குடியிருந்து கொள்ள அனுமதி இல்லை என்றும் தாவா சொத்து எது என்பதை தெளிவாக வழக்கில் வாதி கூறவில்லை என்பதைத்தான் தான் தெரிவித்துள்ளேன் என்றும் எதிர்மனுதாரரால் கூறாத விசயத்தை மனுதாரர் திரித்து misrepresentation ஆக தனது மனு அபிடவிட்டில் புல எண் 194/2 யை பொறுத்து தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்ததாக பொய்யாக சங்கதிகள் கண்டு தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரரால் சமூகம் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யும் காலத்தில் கீழமை நீதிமன்றத்தில் மு.வ.எண்.40/2019ல் 30.10.2019ம் தேதி வழங்கிய தீர்ப்பினை பொறுத்து மீண்டும் கீழமை நீதிமன்றத்திற்கு நீதிமன்ற ஆணையர் நியமன நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் Remand செய்ய வேண்டும் என பரிகாரமும் கோரவில்லை என்றும் மேல்முறையீட்டிற்கான காரணங்களிலும் தாவா மனு அபிடவிட்டில் கூறப்பட்டுள்ள விசயங்களை தெரிவிக்கவில்லை என்றும் மேல் மேல்முறையீட்டின் சொத்து விபரத்தில் I.A.No.2/2023 என்ற எண்ணில் சீர்திருத்த மனு தாக்கல் செய்து

அதுவும் 01.11.2023ல் அனுமதிக்கப்பட்டு மேல்முறையீடானது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர்/மேல்முறையீட்டாளரால் அந்த காலகட்டத்திலும் Remand கோரி பரிகாரத்தை கூடுதல் பரிகாரமாக கோரவில்லை என்றும் அதேபோல் C.P.C Order 41 Rule 1 ன் படி தான் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆனால் Remand கோரி CPC Order 41 Rule 23A யின் படி மேல்முறையீட்டு தாக்கல் செய்தால் தான் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோருவது போல நீதிமன்ற ஆணையர் நியமன நடவடிக்கையை எடுக்க இயலும் என்றும் அவ்வாறு தாவா மேல்முறையீடும், தாவா கமிசன் மனுவும் முன்னுக்குபின் முரணாக கட்டமைக்கப்பட்டுள்ளதால், சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது என்றும் தாவா மேல்முறையீட்டில் நீதிமன்ற ஆணையர் நியமன மனு தாக்கல் செய்ய சட்டப்படியான முகாந்திரங்கள் ஏதும் இல்லை என்றும் An order of remand under Rule 23 can be made only where the trial Court has decided the suit on a preliminary point without recording any findings on the merits and appellate court has reversed that decree என கண்டுள்ள நிலையில் தாவா மேல்முறையீட்டில் நீதிமன்ற ஆணையர் நியமன மனுதார்/மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்ய யாதொரு சட்ட முகாந்திரமும் கிடையாது என்றும் எனவே கீழமை நீதிமன்றத்தில் தான் நீதிமன்ற ஆணையர் நியமன நடவடிக்கை எடுக்க இயலும் அதனால் புதிதாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமேயொழிய அப்பீல் வழக்கில் கமிசன் நியமனம் கோரி மனுத்தாக்கல் செய்ய முடியாது என்றும் எனவே தாவா மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் ஆகையால் தாவா மனுவை எதிர்மனுதார் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இம்மனுவில் மனுதார்கள்/மேல்முறையீட்டாளர் தரப்பிலும் எதிர்மனுதாரர்/ எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பிலும் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் எதுவும் குறியிடு செய்யப்படவில்லை.

**5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:**

**கேள்வி:**

1) மனுதார்/மேல்முறையீட்டாளர் இம்மனுவில் கோரியவாறு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிட வேண்டியது அவசியமா?

2) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**6)** வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில், இம்மேல்முறையீடானது மனுதார்/வாதி தரப்பில் கனம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம் அசல் வழக்கு எண். 40/2019ல் 30.10.2019ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மேல் தாக்கல் செய்து, மேல்முறையீட்டு நிலுவையின் போது, தாவா சொத்தினை நில அளவையர் உதவியுடன் ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்ய வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**7)** உரிமையியல் சட்டம் கட்டளை 26 விதி 9 வழக்கு சொத்தினை ஸ்தல ஆய்வு செய்ய வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்வது பற்றி கூறியுள்ளது. சிபிசி கட்டளை 26 விதி 9 மேல்முறையீட்டிற்கும் பொருந்தும் மேல்முறையீட்டு வழக்கில், வழக்கறிஞரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்படுவதற்கு எவ்வித சட்டப்படியான தடையுமில்லை.

**8)** இம்மேல்முறையீட்டை தீர்மானிக்க நீதிமன்ற ஆணையர் உதவி அவசியமானதா என காணும் போது அசல் வழக்கானது இம்மனுதார் தரப்பில் தாவா சொத்தான புல எண். 194/2 மொத்த விஸ்தீரணம் 19 செண்ட் அளவுள்ள மனையிடம் வாதியின் தந்தை போதகுருசாமியால் பிரதிவாதியின் தந்தை கருப்பையா கோனார் வீடு கட்டி குடியிருந்து கொள்ள அனுமதி அளித்து அதன்படி பிரதிவாதியின் தந்தையால் வீடு கட்டி குடியிருந்து வரும் பகுதி நீங்கலாக மீதமுள்ள காலியிடத்தில் ஒரு பகுதியில் வாதி அனுபவித்து வருவதாகவும் வாதி அனுபவத்தில் உள்ள சொத்தில் பிரதிவாதி கழிவறை கட்ட முயற்சித்து வருகிறார் என்றும் எனவே வாதியின் அனுபவத்திற்கு பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையில் வாதி தரப்பு வழக்குரை சொத்து

விபரத்தில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தான புல எண். 194/2க்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றும், வாதியின் தந்தை போதகுருசாமி என்பவரிடமிருந்து பிரதிவாதியின் தந்தை கருப்பையா 17.07.1972ம் தேதியிட்ட பதிவில்லா கிரையம் மூலம் கிரையம் பெற்று, ஓட்டுவீடு கட்டியும், காலியிடமாக அனுபவித்து வரும் சொத்தின் சர்வே எண். 194/4 என்பதாகும்.

**9)** இருதரப்பு வாதுரைகள் காணும் போது, பிரதிவாதி தந்தையால் வீடு கட்டி குடியிருந்து வரும் வீடும், மீதமுள்ள காலியிடமும் வாதி குறிப்பிடுவது போல சர்வே எண். 194/2 அல்லது பிரதிவாதி குறிப்பிடுவது போல சர்வே எண். 194/4 என கண்டறிய வேண்டிய அவசியம் உள்ளது.

**10)** எதிர்மனுதார் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் மனு சாட்சிகளை திரட்டுவதற்காக வேண்டி தாக்கல் செய்ய அனுமதிக்கலாகாது என்றும், இம்மனு மூலம் மனுதார்/வாதி சாட்சிகளை திரட்ட முயற்சிக்கிறார் என எதிர்வாதிடப்பட்டுள்ளது.

**11)** மனுதார் தரப்பு அபிடவிட் மற்றும் மனுதார் தரப்பு வழக்குரை பரிசீலனை செய்ததில், தாவா சொத்து மனுதார்/வாதி அனுபவத்தில் உள்ளார் என்பதை வெளிக்காட்ட, நிரூபிக்க வேண்டி மனுதார்/வாதி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கேட்கவில்லை. மாறாக தனது தந்தை அனுமதியின் பேரில் பிரதிவாதி தந்தை கருப்பையா கோனார் கட்டியுள்ள வீடும், தனது அனுபவத்தில் உள்ள இடம் சர்வே எண். 194/2 என்பதை நிரூபிக்கவும், பிரதிவாதி குறிப்பிடுவது போல தாவா சொத்தின் சர்வே எண். 194/4 அல்ல என்பதை நிரூபிக்க வேண்டி, தாவா சொத்தினை ஸ்தல ஆய்வு செய்ய வேண்டி கேட்டுள்ளார். வாதி அனுபவத்தில் உள்ள இடம் மற்றும் பிரதிவாதி வீடு அமைவிட இடம் எந்த சர்வே எண் என்பதை சான்றாவணங்கள் மூலம் அறிய முடியாது ஸ்தல ஆய்வு மூலம் மட்டுமே அறிய முடியும். அசல் வழக்கானது வெறும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழக்கு என்ற போதிலும் வழக்கின் முக்கிய தீர்வு காண வேண்டிய பொருண்மையான வாதி அனுபவத்தில் உள்ள காலியிடம் மற்றும் பிரதிவாதி வீடு ஆகியவற்றின் அமைவிடம் இடம் குறித்து தீர்மானிக்க தாவா சொத்தினை ஸ்தல ஆய்வு செய்வது அவசியமானதாகும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் மேல்முறையீட்டினை தீர்மானிக்க மனுவில் கோரியவாறு ஆணையர் நியமனம் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் தீர்மானித்து, அவ்வாறே இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகின்றது.

முடிவாக வழக்கறிஞர் K. ஹபுபீர் ரஹ்மான் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்திரவிடப்படுகின்றது. நீதிமன்ற ஆணையர் கட்டணமாக ரூ.10,000/- என நிர்ணயம் செய்யப்படுகின்றது. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் மேற்படி நீதிமன்ற ஆணையர் கட்டணத்தை நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞரை நேரில் செலுத்தி வைக்க உத்திரவிடப்படுகின்றது. நீதிமன்ற ஆணையர் நில அளவையர் , கிராம நிர்வாக அலுவலர் உதவியுடனும் வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் தரப்பினர்கள் ஆவணங்கள் சமர்ப்பித்தால் அவற்றின் அடிப்படையிலும் மனுச்சொத்தினை பார்வையிட்டு அளந்து பூமியில் நிர்ணயம் செய்து விரிவான அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய உத்திரவிடப்படுகின்றது.

நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய மனு அழைக்க வாய்தா 21.03.2024

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி 8ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**

மனுதார்/மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்/எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**சார்பு நீதிபதி,**
**மானாமதுரை.**